புலம்பெயர் ஊழியர்களுக்கான ரூபாய்க் கணக்கு (MERA)

உற்பத்தியின் தன்மை	வாடிக்கையாளருக்கான நன்மைகள்	ஆரம்ப வைப்பும் கட்டணங்களும்	தகுதிகள்	முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும்
புலம்பெயர் ஊழியர்களுக்கான ரூபாய் கணக்கு (MERA)	• **வட்டி வீதம்** - சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் அதே வட்டி வீதம் https://www.boc.lk/rates-tariff#general என்ற இணைப்பினூடாக கட்டண வீதங்களை அறிந்துகொள்ளலாம்.	• **ஆரம்ப வைப்பு 1500/- ரூபாய்** • கணக்கின் ஆக்குறைந்த மாதாந்த சராசரி மீதியானது 1500/- ரூபாய்க்கும் குறைவாயின் ஒவ்வொரு மாதமும் 35/- ரூபாய் கட்டணமாக அறவிடப்படும். • **கணக்கை முடிவுறுத்தும் கட்டணம் 500/- ரூபாய்** • **கணக்கைப் பேணுதலும் பிற கட்டணங்களும்** - ATM அட்டை வழங்குதல் - கணக்குக் கூற்றுகள் - கணக்குப் புத்தகத்தின் பிரதியொன்றை வழங்குதல் (கணக்குரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதானல் கணக்குப் புத்தகம் வழங்கப்படாது) - கணக்கு மிகுதியை உறுதிப்படுத்தல் - நிலையியற் கட்டளை பதிவும் நிதிப் பரிமாற்றங்களும் - SMS தகவல் கட்டணங்கள் - ATM இல் பணம் மீளப்பெறல் எல்லை மாற்றங்கள் - இணைய வங்கிச் சேவை கட்டணங்கள் https://www.boc.lk/rates-tariff#general என்ற இணைப்பினூடாக கட்டணத்தை அறியலாம். • **வரிகள் -** வட்டியானது அரசாங்கத்தின் மற்றும் அல்லது இலங்கை ஒழுங்குமுறை ஆணையத்தின் அல்லது இலங்கை வங்கியின் அவ்வப்போதான தேவைகளுக்கேற்ப பொருத்தமான முற்பண வருமான வரி, ஏனைய வரிகள் (AIT), கட்டணங்கள் (ஏதேனும் இருப்பின்) மற்றும் நியதிச் சட்ட தீர்வைகள் என்பவற்றின் கழிவுகளுக்கு உட்பட்டதாகும்.	• வெளிநாட்டில் வதியும் 18 வயதுக்கும் மேற்பட்ட இலங்கை புலம்பெயர் ஊழியர்கள் இக்கணக்கைத் திறக்கலாம் (குடிபெயர்ந்தோர் தவிர). • வதிவுள்ள மற்றும் வதிவற்ற நபர்களுக்கிடையில் கூட்டுக் கணக்குகளைத் திறக்க முடியாது. • புலம் பெயர்ந்த ஊழியர்கள் நாட்டை விட்டு புறப்படுவதற்கு முன்னர் திறந்த தற்போதுள்ள ரூபாய் கணக்குகளை மீள வடிவமைத்து MERA கணக்குகளாக செயற்படுத்தலாம். **கணக்கைத் திறப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்** **கணக்கை திறப்பதற்குதேவையான ஆவணங்கள்** • கணக்குத் திறப்பு படிவம் (பதிவிறக்கவும்). • வாடிக்கையாளர் பதிவு படிவம் (பதிவிறக்கவும்). • கணக்கைத் திறப்பதற்குள்ள தகுதிகளை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவங்களை இணைக்கவும். - செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் சுயவிவரப் பக்கத்தின் பிரதி -நிதி மூலத்தை உறுதிப்படுத்துவதற்கு வீசா/தொழில் ஒப்பந்தம்/அனுமதி அல்லது வேறு ஆவணங்களின் பிரதி - வதிவுள்ளோரின் முகவரி - தேசிய அடையாள அட்டையின் பிரதி - வதிவுள்ளோரின் முகவரி தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியிலிருந்து வேறுபடுமாயின் முகவரிச் சான்று ஆவணங்கள் -விண்ணப்பத்திலுள்ள நிரந்தர முகவரி கணக்குத் திறக்கும் கிளையிலிருந்து தொலைவில் உள்ளதாயின் வாடிக்கையாளர் குறித்த கிளையில் கணக்கைத் திறப்பதற்குத் தகுந்த காரணம்	- MERA நடைமுறைக் கணக்குகளுக்கு காசோலைப் புத்தகம் மற்றும் மேலதிகப் பற்று வசதிகள் வழங்கப்படாது. - இலங்கையை விட்டு வெளியேறியமையை அறிவித்ததும் இலங்கை வங்கியில் தற்போது பேணப்படுகின்ற அனைத்து கணக்குகளும் MERA கணக்குகளாக மாற்றப்படும். அத்துடன், அக்கணக்குகளுக்குரிய அனைத்து அட்டைகளும் இரத்துச் செய்யப்படும் -ATM அட்டையை வெளிநாட்டு பாவனைக்காக செயற்படுத்துவதற்கு அனுமதியில்லை. -புலம்பெயர்ந்த ஊழியர் இலங்கையில் வசிக்கும்போது MERA கணக்குகளை மீள வடிவமைத்து சாதாரண சேமிப்புக் கணக்குகளாக தொடரலாம். -இவ்வுற்பத்தியுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை கணக்குத் திறப்பு விண்ணப்பத்தில் அறிந்துகொள்ளலாம். -

வைப்புக் காப்புறுதி காப்பீடு/அங்கீகரிக்கப்படாத (தவறான) பரிவர்த்தனைகளை அறிக்கையிடல் / செயலற்ற கணக்குகள்

ஒரு வைப்பாளருக்கு ஆகக்கூடியது 1,100,000/- ரூபாய் இழப்பீட்டுக்குப் பொருந்தக்கூடிய காப்பீடினை செலுத்துவதற்காக நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தில் வைப்புப் பொறுப்புக்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

- அங்கீகரிக்கப்படாத/தவறான பரிவர்த்தனைகளை கண்டறியும்போது அவற்றை உடனடியாக வங்கிக்கோ அல்லது கணக்கினைப் பேணும் கிளைக்கோ அறிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு எவ்விதப் பண மீளப்பெறலும்/கொடுப்பனவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், அவ்வருடத்தின் நிறைவின்போது கணக்கு 'செயலற்றதாக' மாறும்.
- அத்தகைய கணக்குகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரம் ஏதும் இல்லை எனில் அந்தக் கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்படும்

உங்களது கருத்தை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- வாடிக்கையாளர்கள் பின்வரும் எந்தவொரு தெரிவுகள் ஊடாகவும் தங்களது கருத்துக்களையும் முறைபாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்.
- உங்களது பாராட்டுகளையும் முறைபாடுகளையும் எமது வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவப் பிரிவின் ஊடாகப் பதிவு செய்யலாம். உங்களது கோரிக்கைகள் தானியங்கி முறைமை மூலம் முன்னுரிமையுடன் கருத்திற்கொள்ளப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலை நகல் : +94 11 243 5815 மின்னஞ்சல்: bocexmgt@boc.lk வலைத்தளம்: https://www.boc.lk

தபால்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22வது மாடி, இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எமது எந்தவொரு கிளையையும், சேவை பிரிவையும் அல்லது அழைப்பு மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

எமது உற்பத்திகள் அல்லது சேவைகள் பற்றிய உங்களது கருத்துகளை/விசாரணைகளை எமது கிளைகளுக்கோ அல்லது தொடர்பு மையத்திற்கோ அறிவிக்கலாம். உங்களுக்கு அருகிலுள்ள கிளையை 1975 என்ற எண்ணூடாக (அழைப்பு மையம்) அறிந்துகொள்ளலாம்.